


**09. 01. 2026**

தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு. நரேந்திரமோடி ஜெர்மனி தலைவர் திரு. ஃப்ரெட்ரிச் மெர்ஸை வரும் 12ஆம் தேதி புதுதில்லியில் சந்தித்து இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொள்கிறார்.

2. அதி நவீன தரவு மேலாண்மை டிஜிட்டல் தளம் புலனாய்வு முகமைகளின் ஒருங்கிணைப்பை வலுப்படுத்தும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா தெரிவித்துள்ளார்.

3. கல்வி, மருத்துவம், தொழில்வளர்ச்சி உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் தமிழகம் சிறந்து விளங்குவதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்..

4. பொங்கல் திருநாளை முன்னிட்டு ஆம்னி பேருந்துகளில் கூடுதல் கட்டணம் வசூலிப்பது கண்டறியப்பட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநில போக்குவரத்து துறை அமைச்சர் திரு.சிவசங்கர் எச்சரித்துள்ளார்.

5. கோலாலம்பூரில் நடைபெறும் மலேஷிய ஓப்பன் பேட்மிண்டன் ஆடவர் இரட்டையர் காலிறுதியில் இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ், சிராக்ஷெட்டி இணை இன்று களமிறங்குகிறது.

இனி விரிவான செய்திகள்

*************

பிரதமர் ஜெர்மன்

பிரதமர் திரு.நரேந்திரமோடி ஜெர்மனி தலைவர் திரு. ஃப்ரெட்ரிச் மெர்ஸை வரும் 12ஆம் தேதி புதுதில்லியில் சந்தித்து பேசுகிறார்.

பிரதமர் திரு.நரேந்திரமோடியின் அழைப்பை ஏற்று இரண்டு நாள் பயணமாக இந்தியா வரும் ஜெர்மன் தலைவர், காந்தி நகரில் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொள்கிறார்.

இந்தியா ஜெர்மனி இடையிலான தூதரக நட்புறவின் 25 ஆண்டுகள் நிறைவை அடுத்து அடுத்த கட்ட முன்னேற்ற நடவடிக்கைகள் குறித்து இதில் விரிவாக விவாதிக்கப்பட உள்ளது.

முதலீடுகள், தொழில்நுட்பம், கல்வி, திறன்மேம்பாடு, போக்குவரத்து, பாதுகாப்பு, அறிவியல், புத்தாக்க ஆராய்ச்சி, பசுமை இயக்கம், தொழில்நுட்பம், நீடித்த வளர்ச்சி மக்கள் சார்ந்த உறவுகள் குறித்தும் இரு தலைவர்களும் ஆலோசனைகளை மேற்கொள்கின்றனர்.

பரஸ்பர நலன்சார்ந்த சர்வதேச பிராந்திய பிரச்சனைகள் குறித்தும் இரு தலைவர்களும் விவாதிக்கின்றனர்.

*************

பிரதமர்

வெளிநாடு வாழ் இந்தியர்கள் உலகிற்கும் இந்தியாவிற்கும் இடையே இணைப்பு பாலமாக திகழ்கிறார்கள் என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.

வெளிநாடு வாழ் இந்தியர்களின் தினத்தை ஒட்டி வாழ்த்து தெரிவித்துள்ள பிரதமர், நம் நாட்டு மக்கள் சென்ற இடமெல்லாம் அப்பகுதிகளை செறிவூட்டி வளப்படுத்தும் அதேவேளையில், தத்தம் வேர்களோடு இணைந்திருப்பதாக பெருமிதம் தெரிவித்தார்.

நம் நாட்டின் கலாச்சார மரபுகளை உலகம் முழுமைக்கும் இந்திய வம்சாவளியினர் கொண்டு செல்வதாக எடுத்துரைத்தார்.

வெளிநாடு வாழ் இந்தியர்களின் தாய் நாட்டு உறவை வலுப்படுத்தும் வகையில் மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயலாற்றி வருவதாக பிரதமர் கூறினார்.

*************

அமித்ஷா

உள்நாட்டு பாதுகாப்பு மற்றும் தீவிரவாத தடுப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்தும் வகையில் ஹரியானா மாநிலம் குருகிராமில் அதி நவீன தரவு மேலாண்மை டிஜிட்டல் தள செயல்பாட்டை மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா காணொலி வாயிலாக இன்று துவக்கிவைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அவர், இந்த புதிய தளம், புலனாய்வு முகமைகளின் ஒருங்கிணைப்பை வலுப்படுத்துவதோடு, தகவல்களை உரிய முறையில் பரிமாறிக்கொள்ள வகை செய்வதாக குறிப்பிட்டார்.

தேசிய பாதுகாப்பு படையினர் உருவாக்கியுள்ள இந்த டிஜிட்டல் தளம், தரவுகளை துல்லியமாக திரட்டி, ஒருங்கிணைத்து செயலாக்கம் பெற வழிகோலும் என்றும் கூறினார்.

காவல்துறையினர், பாதுகாப்பு படையினர், தீவிரவாத தடுப்பு பிரிவுகள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும், புலனாய்வை இலகுவாக முன்னெடுக்க இது வழிகோலும் என்றார்.

வரும் காலங்களில் தீவிரவாத தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளை துரிதமாக மேற்கொள்ள இது வகை செய்வதோடு, நவீன வெடிபொருட்களின் பயன்பாடு குறித்தத துல்லிய தகவல்களை அளிக்கும் என்றார்.

கடந்த காலங்களில் இத்தகைய தரவுகள் இருந்தபோதிலும் அவை ஒருங்கிணைக்கப்படாமல் இருந்ததாக எடுத்துரைத்த அமைச்சர், தற்போது அனைத்து தரவுகளும், அது சார்ந்த ஆதாரங்களும் இணைக்கப்பட்டு, அதி நவீன செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான மென்பொருள் மூலம், புலனாய்வு மேற்கொள்ளப்படும் என்றார்.

நாட்டை பாதுகாக்க அதி நவீன தரவு மேலாண்மை டிஜிட்டல் தளம் ஒரு புதிய மைல் கல்லாக திகழும் என்றும் குறிப்பிட்டார்.

*************

ஜெய்சங்கர்

மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் ஃபிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரோனை பாரீசில் இன்று சந்தித்து பேசினார்.

இந்தியா ஃபிரான்ஸ் நாடுகள் இடையிலான ஆக்கப்பூர்வமான தூதரக உறவுகள் மற்றும் வளர்ச்சிக்கான அந்நாட்டின் பல்வேறு செயல்பாடுகளுக்கு டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் பாராட்டு தெரிவித்தார்.

ஃபிரான்ஸ் தூதரக மாநாட்டிலும் உரையாற்றிய டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் வர்த்தகம், நிதி தொழில்நுட்பம், எரிசக்தி, வள ஆதாரங்கள், இணைப்பு திட்டங்களில் இருநாட்டு முன்னேற்றங்கள் குறித்தும் எடுத்துரைத்தார்.

ஃபிரான்ஸ் இந்தியா இடையிலான நட்புறவு தனித்துவத்துடனும், பண்முக தன்மையோடும் செயல்படுவதாக டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் குறிப்பிட்டார்.

*************

இளம் தலைவர்கள் மாநாடு

வளர்ச்சி அடைந்த பாரதத்திற்கான இளம் தலைவர்கள் உரையாடல் நிகழ்ச்சி புதுதில்லி பாரத் மண்டபத்தில் இன்று தொடங்கியது.

மத்திய இளைஞர் நலத்துறை இணை அமைச்சர் திருமதி ரக்-ஷா கட்ஷே இதனை துவக்கிவைத்தார்.

நாட்டின் கலாச்சார மரபுகளை உலக அளவில் முன்னெடுத்து செல்லும் வகையில் இதில் பங்கேற்றிருக்கும் இளையோர் ஆக்கப்பூர்வமான ஆலோசனைகளை தெரிவிக்க அவர் கேட்டுக்கொண்டார்.

நான்கு நாட்கள் நடைபெறும் இம்மாநாட்டின் நிறைவு நாள் நிகழ்ச்சியில் வரும் 12ஆம் தேதி பிரதமர் திரு.நரேந்திரமோடி சிறப்புரையாற்றுகிறார்.

*************

முதலமைச்சர்

கல்வி, மருத்துவம், தொழில்வளர்ச்சி உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் தமிழகம் சிறந்து விளங்குவதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

திருவள்ளூர் மாவட்டம் பாடியநல்லூரில் மாநில அரசின் உங்கள் கனவு திட்டத்தை இன்று தொடங்கிவைத்து பேசிய அவர், பொருளாதார வளர்ச்சியில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக திகழ்வதாக பெருமிதம் தெரிவித்தார்.

வாய்ஸ்

*************

சிவசங்கர்

பொங்கல் பண்டிகையை ஒட்டி இன்றுமுதல் சென்னை கிளாம்பாக்கத்திலிருந்து வரும் 14ஆம் தேதிவரை சிறப்பு பேருந்துகள் மாநிலம் முழுவதும் இயக்கப்படுகின்றன.

இதனிடையே ஆம்னி பேருந்துகளில் பொதுமக்களிடமிருந்து கூடுதல் கட்டணம் வசூலிப்பது கண்டறியப்பட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநில போக்குவரத்து துறை அமைச்சர் திரு.சிவசங்கர் எச்சரித்துள்ளார்.

இதுகுறித்து பொதுமக்கள் புகார் தெரிவிக்கலாம் என்றும் அறிவுறுத்தியுள்ளார்.

*************

சேகர்பாபு

வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ் 776 குடியிருப்புகள் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக வரும் 21ஆம் தேதி முதல் செயல்பாட்டிற்கு வரும் என்று சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும தலைவர் திரு.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், கடந்த நான்கரை ஆண்டுகளில் பல்வேறு மக்கள் நல திட்டங்களை அரசு முனைப்புடன் செயல்படுத்தியதாக கூறினார்.

*************

கடத்தல்

ஹவ்ரா விரைவு ரயிலில் கடத்திவரப்பட்ட 21 கிலோ போதை பொருளை ஜோலார்பேட்டை – ஆம்பூர் இடையே போதை பொருள் தடுப்பு பிரிவு காவல்துறையினர் பறிமுதல் செய்தனர்.

ரயில் பெட்டிகளில் இருக்கைகளுக்கு கீழ் கேட்பாரற்று 15-க்கும் மேற்பட்ட மூட்டைகளில் கொண்டுவரப்பட்ட இந்த பொதை பொருள் ஜோலார்பேட்டை ரயில்வே காவல் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டது.

*************

ஈரோடு – பூ சந்தை

பனிப்பொழிவு காரணமாக ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் பூ சந்தையில் ஒரு கிலோ மல்லிகை 6 ஆயிரத்து 400 ரூபாயாக இன்று விலை அதிகரித்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

*************

நெல்லை:

நெல்லை மாவட்டத்தில் பொங்கல் பண்டிகைக்காக பயிரிடப்பட்ட மஞ்சளுக்கு நல்ல விளைச்சல் கண்டுள்ள நிலையிலும், உரிய விலை கிடைக்கவில்லை என விவசாயி தெரிவிக்கிறார்.

விவசாயி வாய்ஸ்

*************

இருவரி

மதுரை அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு போட்டிக்காக மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாட்டு பணிகளை மாநில வணிகவரித்துறை அமைச்சர் திரு.மூர்த்தி இன்று ஆய்வு செய்தார்.

மதுரை மாவட்டத்தில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திர கிடங்கில் மாதிரி வாக்குப்பதிவு பணிகள் நடைபெறுவதை ஆட்சித்தலைவர் திரு.பிரவீன்குமார் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் இன்று பார்வையிட்டார்.

நாமக்கல் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் மற்றும் திருநங்கைகளுக்கான சிறப்பு முகாம் நாளை நடைபெற உள்ளதாக ஆட்சித்தலைவர் திருமதி துர்கா மூர்த்தி தெரிவித்துள்ளார்.

சிவகங்கை மாவட்டத்தில் முதலமைச்சர் விளையாட்டு திருவிழாவில் பங்கேற்க விருப்பமுடையோர் வரும் 21ஆம் தேதிக்குள் முன்பதிவு செய்யுமாறு ஆட்சித்தலைவர் திருமதி பொற்கொடி அறிவுறுத்தியுள்ளார்.

தூத்துக்குடி மாவட்டம் மீளவிட்டானில் போகி பண்டிகையை முன்னிட்டு சிப்காட் வளாகத்தில் தூய்மை பணிகளை ஆட்சித்தலைவர் திரு.இளம்பகவத் இன்று தொடங்கிவைத்தார்.

*************

தண்ணீர் திறப்பு

ஈரோடு மாவட்டம் பவானி சாகர் அணையிலிருந்து 2ஆம் போக புன்செய் பாசனத்திற்கு இன்று தண்ணீர் திறக்கப்பட்டது.

12 ஆயிரம் மில்லியன் கன அடிக்கு மிகாமல் திறக்கப்படும் இந்த தண்ணீரின் மூலம் ஈரோடு, திருப்பூர் கரூர் மாவட்டங்களுக்குட்பட்ட ஒரு லட்சத்து 30 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதிபெறும்.

இதேபோல் கிருஷ்ணகிரி அணை நீர்தேக்கத்திலிருந்து 2-ம் போக பாசனத்திற்காக 120 நாட்களுக்கு தண்ணீரை இன்று ஆட்சித்தலைவர் திரு.தினேஷகுமார் திறந்துவைத்தார்.

*************

ஸ்ரீரங்கம்

ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோவில் வைகுண்ட ஏகாதசி ராப்பத்து உற்சவம் நம்மாழ்வார் மோட்சத்துடன் இன்று நிறைவடைகிறது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

*************

பேட்மிண்டன்

கோலாலம்பூரில் நடைபெறும் மலேஷிய ஓப்பன் பேட்மிண்டன் ஆடவர் இரட்டையர் காலிறுதியில் இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ்,

சிராக்ஷெட்டி இணை – இந்தோனேசிய இணையை இன்று எதிர்கொள்கிறது.

மகளிர் ஒற்றையர் அரையிறுதிக்கு பி.வி.சிந்து முன்னேறியுள்ளார்.

*************

கிரிக்கெட்

மகளிர் பிரீமியர் லீக் 20-20 கிரிக்கெட் போட்டிகள் இன்று தொடங்குகின்றன.

நவி மும்பையில் இன்று இரவு நடைபெறும் முதல் போட்டியில் நடப்பு சேம்பியன் மும்பை இண்டியன்ஸ் – ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களுருவை எதிர்கொள்கிறது.

*************

இத்துடன் இந்த செய்திறிக்கை முடிவடைந்தது